IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW12

Name : சின்னசாமி Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு சங்கரன் காட்டுப்புதூரில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். எனது பக்கத்து வீட்டுக்காரர் மூலமாக பெருமாள் என்பவர் எனக்கு அறிமுகமானார். 20 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் இரண்டு ஏக்கர் காடு வாங்கி தருவதாக பெருமாள் சொன்னார். தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் உடன் கூடவே இருக்கும் ஒரு நபர் மூலமாக நிலத்தை வாங்கி தருவதாக சொன்னார்.அவர் சொன்னதன் பேரில் 2011-ம் ஆண்டு சென்னை சேப்பாக்கம் சென்று அங்கு ஒரு லாட்ஜில் இருந்த ஹரிபாபு என்பவரை பெருமாள் என்பவர் அறிமுகப்படுத்தினார். அங்கு பெருமாள் என்பவரிடம் ரூ.20,000/- பணம் கொடுக்க அவர் அதை வாங்கி ஹரிபாபு என்பவரிடம் கொடுத்தார் ஹரிபாபு தான் நிலத்தை வாங்கி கொடுப்பதாக சொல்லி அவரிடம் பெருமாள் கொடுத்தார். ஹரிபாபு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:38:16 +0530

ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதன் பிறகு இரண்டு, மூன்று மாதம் ஆகியும் நிலம் வாங்கி தரவில்லை. பின்னிட்டு ஒரு வருடம் கழித்து தான் என்னை போல் நிறைய பேரிடம் பணம் வாங்கியுள்ளதாக தெரியவந்தது. பின்னிட்டு இது சம்பந்தமாக என்னை போல் ஏமாற்றப்பட்ட ஒரு நபர் புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பணம் கொடுத்து வாங்கியது எல்லாமே மெட்ராஸில் தான் இங்கு இல்லை என்றால் சரிதான். குற்றம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மெட்ராஸ் என்றால் சரிதான். அங்கு தான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் எங்களுக்கு அந்த அளவுக்கு அறிமுகம் இல்லை என்பதால் இங்கு புகார் கொடுத்தேன். மற்றவர்களும் புகார் கொடுத்ததால் என்னையும் புகார் கொடுக்க வேண்டும் என்று அழைத்ததன் பேரில் நான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

நான் ரூ.20,000/- பணம் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பணம் கொடுத்து வேறு ஒருவருக்கு செல்லும் வாய்ப்பை தட்டிப் பறிக்கும் செயல் தவறானது என்று எனக்கு தெரியுமா என்றால் தற்பொழுது தான் தெரியும். நான் சொல்வது போல் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டதன் பெயரில் நான் பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ,

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:38:24 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW13

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிசாமி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு வேமாண்டம் பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பெருமாள் என்பவர் அவரது சித்தாப்பா சென்னியப்பன் மூலம் எனக்கு அறிமுகமானார். அதன் பேரில் பெருமாள் எனது வீட்டிற்கு வந்து இரண்டு ஏக்கர் இடம் வாங்கி தருவதாகவும், பணம் ரூபாய் 20,000/– செலுத்தினால் வாங்கி விடலாம் என கூறினார். 2011 ஆம் வருடம் பெருமாள் என்னை சென்னைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு ரூம் எடுத்து தங்க வைத்தார். அன்றைய தினம் இரவு 11 மணியளவில் பெருமாள் என்பவர் மற்றொரு நபரை அழைத்து வந்தார் . அவர் பெயர் ஹரிராம் என்று நினைக்கிறேன். பெருமாள் அந்த நபரை காண்பித்து இவர் தான் பெரிய ஆபீஸர் என்று அறிமுகப்படுத்தி வைத்தார். அதன் பிறகு அந்த ஆபிசர் என்னிடம் பணம் கேட்டார். நான் எனக்கு பெருமாள் தான் தெரியும் என்று கூறி பெருமாளிடம் ரூ.20,000/– பணம் கொடுத்தேன். பெருமாள் அந்த

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:38:32 +0530

பணத்தை வாங்கி அந்த ஆபீஸரிடம் கொடுத்தார். அதன்பிறகு நிலத்தை வாங்கித் தரவில்லை அவர்களை பார்க்கவே முடியவில்லை. இது சம்பந்தமாக எனக்கு அறிமுகமான பாதிக்கப்பட்ட மற்றொரு நபர் புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர். பெருமாள் மற்றும் மற்றொரு ஆபிசர் எனக்கு சொல்லப்படும் ஹரி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பணம் கொடுத்து வாங்கியது எல்லாமே மெட்ராஸில் தான் இங்கு இல்லை என்றால் சரிதான். இங்குதான் ஆரம்பிக்கப்பட்டது. குற்றம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மெட்ராஸ் என்றால் சரிதான். அங்கு தான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் ரூ.20,000/- பணம் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நானும் பணம் கொடுத்ததற்கு ரசீது எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

பணம் கொடுத்து வேறு ஒருவருக்கு செல்லும் வாய்ப்பை தட்டிப் பறிக்கும் செயல் தவறானது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தவறாக தெரியவில்லை. லஞ்சம் கொடுத்து வாங்குவது எனக்கு தவறாக தெரியவில்லை. நான் சொல்வது போல் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டதன் பெயரில் நான் பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ,

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:38:39 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW14

| | | | |
|---|---|---|---|
| Name | : பார்வதி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு வேமாண்டம் பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது அக்கா மகன் வீர கோபால் மூலமாக பெருமாள் சாமி என்பவர் எனக்கு அறிமுகமானார். பெருமாள் சாமி என்னிடம் இரண்டு ஏக்கர் இடம் வாங்கி தருவதாகவும் அதற்கு 40 ஆயிரம் ரூபாய் பணம் வேண்டும் என்று கேட்டார். முதலமைச்சரிடம் PA வாக உள்ள ஹரி என்ற நபர் மூலமாக பணம் கொடுத்து ஏற்பாடு செய்து தருவதாக பெருமாள் சொன்னார். 2011 ஆம் வருடம் சென்னை சேப்பாக்கம் சென்று ஹோட்டலில் தங்கி இருந்து, அங்கிருந்த பெருமாள் மற்றும் ஹரி ஆகியோரிடம் 40 ஆயிரம் பணத்தை பெருமாளிடம் கொடுத்து, பெருமாள் ஹரி என்பவரிடம் கொடுத்தார்.

நான் பணம் கொடுக்கும் போது எனது மகள் கீதா, கவிதா, பெருமாள், ஹரி மற்றும் ஒரு நபர் இருந்தனர். கீதா மற்றும் கவிதா ஆகியோருக்கு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:38:48 +0530

வேலை வாங்கி தருவதாக கூறி கவிதா என்பவரிடம் ரூ.40,000/-, கீதா என்பவரிடம் ரூ.30,000/- பெற்றார். மேற்படி பணம் சேப்பாக்கம் லாட்ஜில் வைத்து தான் கொடுக்கப்பட்டது. பொள்ளாச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் வேலை வாங்கித் தருவதாக சொன்னதன் பேரில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று பெருமாள் மற்றும் ஹரி ஆகியோரிடம் ரூ.1,30,000/- கொடுத்தோம். அதன்பிறகு நிலமும் வாங்கி தரவில்லை, வேலையும் கிடைக்கவில்லை.அதன் பிறகு சிவராமன் என்பவர் புகார் கொடுத்தார். பெருமாள் மற்றும் ஹரி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதன் பேரில் போலீசார் எங்களை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பணம் கொடுத்து வாங்கியது எல்லாமே மெட்ராஸில் உள்ள ஒரு லாட்ஜில் தான் என்றால் பொள்ளாச்சியில் ஒரு முறையும், சென்னையில் லாட்ஜில் வைத்தும் பணம் கொடுக்கப்பட்டது. நான் மெட்ராஸில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். குற்றம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மெட்ராஸ் என்றால் சரிதான். அங்கு தான் புகார் கொடுக்க வேண்டும் ஈரோட்டுக்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொல்லிய தொகைகள் எந்த தேதி, மாதம் வைத்து கொடுக்கப்பட்டது என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2011 ஆம் வருடம் கொடுக்கப்பட்டது.

நான் முதல் விசாரணையில் சொல்லிய தொகைகள் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் எனக்கு

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:38:55 +0530

சிறுக சிறுக சேர்த்து வைத்தது. நான் ரூ.40,000/- பணம் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நானும் பணம் கொடுத்ததற்கு ரசீது எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்து வேறு ஒருவருக்கு செல்லும் வாய்ப்பை தட்டிப் பறிக்கும் செயல் தவறானது என்றால் தவறுதான். நான் கொடுத்த பணம் அரசு அலுவலகத்திற்கு சென்றதா இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் முதலீடு செய்த பணம் எனக்கு வராததால் மற்றவர்களெல்லாம் கொடுத்த புகாரின் பேரில் என்னையும் புகார் கொடுக்கச் சொன்னதன் பேரில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

நான் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் புகார் கொடுத்த பிறகு ஒரு முறை போலீசார் விசாரித்தனர். போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டதன் பெயரில் நான் பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ,

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:01 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW15

| | | | |
|---|---|---|---|
| Name | : கீதா | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் வேமாண்டபாளையத்தில் குடியிருந்து வந்து வீட்டு வேலை செய்து வருகிறேன். எனது பெரியம்மா மகன் வீர கோபால் என்பவர் மூலமாக பெருமாள் என்பவர் எனக்கு அறிமுகமானார். பெருமாள் எனது வீட்டிற்கு வந்து எனக்கு நர்ஸ் வேலை வாங்கித் தருவதாக கூறி சென்னைக்கு வர சொன்னார். நானும் எனது அம்மா, அண்ணன் வீரகோபால், பெருமாள் ஆகியோர் சென்னை சென்றோம். சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஒரு லாட்ஜில் வைத்து பெருமாள்சாமி என்பவரிடம் 30 ஆயிரம் ரூபாய் கொடுத்தேன். ஜெயலலிதா என்பவரின் பிஏ ஹரிபாபு என்பவர் நாங்கள் தங்கி இருந்த அறைக்கு பக்கத்தில் உள்ள அறையில் இருப்பதாக பெருமாள் சாமி சொன்னார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:08 +0530

பணம் கொடுத்துவிட்டு பிறகு நாங்கள் ஈரோடு வந்து விட்டோம். பிறகு பத்து நாட்கள் கழித்து பொள்ளாச்சி பெரிய அரசு மருத்துவமனைக்கு நானும் எனது அம்மா பெருமாள் சாமி மற்றும் ஹரிபாபு ஆகியோர் சென்றோம். அங்கு சென்று சிறிது நேரம் காத்திருந்தோம். ஹரிபாபு என்பவர் அந்த மருத்துவமனையில் டீன் என்பவரை சந்தித்து பார்த்து பேசி விட்டு வருவதாக சென்றார். நாங்கள் வெளியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு ஹரிபாபு வந்து மூன்று மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அதன் பிறகு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் வைத்து ரூ.1,30,000/– ரூபாயை பெருமாள் சாமி இடம் கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது ஹரிபாபு என்பவரும் உடன் இருந்தார். அதன்பிறகு போன் செய்த போது பெருமாள் போனை எடுக்கவில்லை.

எனது பாட்டி வீட்டிற்கு பின்புறம் உள்ள பெருமாள் வீட்டில் சென்று கேட்டபோது அவர் எனக்கு தெரியாது என்று கூறி அதன் பிறகு எங்களிடம் பேசவே இல்லை. அதன் பிறகு தான் எங்களுக்கு சந்தேகம் வந்தது. அதன் பிறகு எங்களைப் போல் பாதிக்கப்பட்ட ராமன் என்பவர் புகார் கொடுத்தார். 50 நபர்களுக்கும் மேலாக பாதிக்கப்பட்ட நபர்கள் அங்கே புகார் கொடுக்கும்போது இருந்தனர் . நான் வங்கி மூலமாக பணம் அனுப்புவதாக சொன்னதற்கு அவர்கள் வேண்டாம் என்று சொல்லி கையில்தான் பணம் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எனது வேலை வாய்ப்பு பதிவு அட்டையை பெருமாள் சாமி வாங்கி வைத்துக் கொண்டார். அவர் சொன்னதை நம்பியதால் எனது அம்மாவும், அக்காவும் வேலை சம்பந்தமாகவும்,நிலம் சம்பந்தமாகவும் பணம்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:14 +0530

கொடுத்தனர். பெருமாள் மற்றும் ஹறி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று தேதி ஞாபகம் இல்லை என்றால் சரிதான் 2011 ஆம் வருடம் கடைசியிலும் 2012 ஆம் வருடம் முதலிலும் பணம் கொடுத்தேன். எனக்கு முன்பு சாட்சியமளித்தவர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் எனது அம்மா மற்றும் பங்காளிகள். ஒரே ஊரைச் சேர்ந்த ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். பெருமாள்சாமியும் எனது வகுப்பைச் சார்ந்தவர். வேலைவாய்ப்பு பதிவு அட்டையை பொறுத்து நான் எழுதிக் கொடுத்தால் திரும்பவும் வாங்கிக் கொள்ள முடியும் என்றால், நான் திரும்ப எழுதி வாங்கி வைத்துக் கொண்டேன்.

எனக்கு வேலை வாய்ப்பு பதிவகத்தின் மூலம் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் வேலை கிடைத்து விட்டதாகவும், நேர்முக தேர்வுக்கு வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.அது அரசாங்கத்திடமிருந்து தான் வந்தது.நான் சென்னைக்கு சென்று பணம் கொடுத்ததற்கு பின்னிட்டு தான் அந்த வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வுக்கான அட்டை எனக்கு அரசாங்கத்திடமிருந்து வந்தது. அதன்பிறகு எப்போது வேலைக்கு சேர்ந்தது என்றால் நேர்முக தேர்வு என்று தான் சொல்லி அழைத்துச் சென்றார்கள்.

அரசாங்க வேலையை ஒரு தகுதியான நபருக்கு செல்லும் வேலையை லஞ்சம் கொடுத்து பெறுவது தவறு என்று எனக்கு தெரியுமா என்றால் அரசாங்கச் செலவு, போக்குவரத்து செலவு, அங்கு பணிபுரியும் நபர்களுக்கு செலவு என்று சொல்லி வாங்கினார்கள். நான் பணம் கொடுத்து வாங்கியது

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:39:20 +0530

எல்லாமே பொள்ளாச்சி மற்றும் சென்னை என்றால் சரிதான். அதனால் நான் ஏமாற்றப்பட்டதாக கூறும் இடம் பொள்ளாச்சி மற்றும் சென்னை தான் என்றும், இந்த காவல் நிலையத்திற்கு அதிகார வரபில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் பணத்தை வாங்கி ஏமாற்றவில்லை என்றும், போலீசார் என்னை சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் நான் தன்னிச்சையாக வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் நான் பணம் கொடுத்த தேதி தெரியும் என்றும் யாரிடம் பணம் கொடுத்தேன் என்று புகாரில் சொல்லி இருப்பேன் என்றும், அவர் இல்லாததால் தான் சொல்ல இயலவில்லை என்றும், நான் பணமே கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, ஒரு முறை விசாரித்தனர். புகார் எழுதிய பிறகு என்னை விசாரித்து அதன் பிறகு புகாரை வாங்கிக் கொண்டனர் என்றால் சரிதான். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்ல

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:26 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW16

Name : கவிதா Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து வந்து வீட்டுக்கு குடித்தனம் செய்து வருகிறேன் வழக்கு சம்பவத்தின் போது ஈரோடு அண்ணா நகரில் எனது அம்மா வீட்டில் வசித்து வந்தேன். எனது பெரியம்மா மகன் வீரகோபால் என்பவர் பெருமாள் என்பவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பெருமாள் எனது வீட்டிற்கு வந்து எனக்கு கம்ப்யூட்டர் வேலை வாங்கித் தருவதாக ரூ.40,000/- பணம் கேட்டார். முதலமைச்சர் கீழே வேலை பார்க்கும் ஹரிபாபு என்பவர் வேலை வாங்கி தருவதாகவும் அவரை பார்க்க வேண்டும் என்று கூறி பெருமாள் எங்களை சென்னை 17.11..2011 அன்று அழைத்துச் சென்றார். சென்னை சேப்பாக்கம் அருகில் உள்ள பார்க் என்ற லாட்ஜில் ஹரிபாபு என்பவர் அங்கு வந்தார். நான் எனது அண்ணன் வீரகோபாலிடம் 40 ஆயிரம் கொடுத்தேன்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:34 +0530

எனது அண்ணன் வீரகோபால் பெருமாளிடம் கொடுத்து பெருமாள் ஹரிபாபு இடம் கொடுத்தார். அதன்பிறகு எனக்கு வேலை வரவில்லை. இது சம்பந்தமாக நான் எனது அண்ணன் வீரகோபாலிடம் கேட்டேன். வீர கோபால் பெருமாளிடம் கேட்க வேண்டும் என்று கூறினார். பெருமாள் ஹரிபாபு உடன் கேட்க வேண்டும் என்று கூறினார். எனது அண்ணன் மூலமாக ஹரிபாபு உடன் கேட்டபோது, ஹரிபாபு அது சம்பந்தமாக தெரியாது என்று கூறிவிட்டார்.

எனது அம்மாவிடம் நிலம் வாங்கி தருவதாக ரூ.40,000/- ரூபாயும், எனது தங்கைக்கு அரசு மருத்துவமனையில் வேலை வாங்கி தருவதாக ரூ.1,60,000/- ரூபாயும் பெருமாலும், ஹரிபாபுவும் வாங்கினார்கள். பெருமாள் மற்றும் ஹரி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட சிவகுமார் என்பவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது சென்னையில் தான் வசிக்கிறேன். வழக்கு சம்பவம் 2011 இல் நடந்த போது நான் ஏன் சென்னையில் புகார் கொடுக்கவில்லை என்றால் பெருமாள் வீடு இங்கு தான் உள்ளது. வழக்கு சம்பவ இடம் நடைபெற்றது சென்னை தான் என்பதால் சென்னையில் தான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் எனது அண்ணன் இங்கு சிவகிரியில் தான் உள்ளார் எனது அண்ணன் மூலமாக போனதால் தான் இங்கு புகார் கொடுத்தோம். நான் சொல்வது போல் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:39:41 +0530

என்றும், நான் பொய்யாக சாட்சி மளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் பணம் கொடுத்து அரசு வேலை பெறுவது என்பது தகுதியான நபர்களின் வாய்ப்பை பறிக்கும் செயல் என்றால் சரிதான். அதுவும் ஒரு வகையில் தவறு என்றால் சரிதான். நான் கொடுத்த பணம் அரசாங்கத்தில் பணிபுரியும் நபர்களுக்கு போய் சேர்ந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. எனக்கு வேலை கிடைக்காததால் மட்டுமே புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வேலையும் கிடைக்கவில்லை கொடுத்த பணமும் வரவில்லை. மற்றவர்கள் சாட்சி சொல்ல வரும்போது போலீசார் என்னிடம் சொல்லி பொய்யாக ஒரு சாட்சியை அழைத்து வந்தனர் என்றும், நான் சொல்வது போல் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

நான் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல போலீசார் விசாரித்தனர். போலீசார் எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். புகார் கொடுத்ததற்கும் பின்னிட்டு நாங்கள் காவல் நிலையம் சென்றோம் அங்கு வைத்து விசாரித்தனர்.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:39:47 +0530